தமிழ் நாட்டில் பாலியஸ்டர் பிலமெண்ட் நூல் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்

*வினா எண். 851—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறையில் பாலியஸ்டர் பில மென்ட் நூல் (Polyester Fil ment Yar) தயாரிக்கும் தொழிற் சாலை நிறுவ உரிமம் கோரி யாரேனும் விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவ்விண்ணப்பத்தின் மீது அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம். இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிட்., பம்பாய் என்ற நிறுவனம் மணலி யில் தொழிற்சாலை நிறுவ மத்திய அரசுக்கு விண்ணப்பித்தது.

(ஆ) அவ்விண்ணப்பத்தினை ஆய்வு செய்தபின் அதனை ஏற்குமாறு மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்

(அ) எஞ்சிய வினாக்களுக்கான விடைகள் அச்சிடப் பெறுவது.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இதற்கு முன்னால் நம்முடைய சட்டமன்றத்தில் வகுத்துக்கொண்டு பின்பற்றக்கூடிய முறை இன்று மாற்றப் பட்டிருப்பது தேவைதானா என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக் கொண்ட வினாக்களில் பாதியளவுக்குதான் முடிந்திருக்கிறது. இன் னும் பாதி இருக்கிறது. இன்றைக்கு ஆதி திராவிடர் நலன் பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்துக்கு வருகிறது. நிறைய உறுப் பினர்கள் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நேரம்